# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 05.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 20144/SCIC/2023**

திருமதி.V.குமுதம், க/பெ.M.வேணுகோபால் ..... மேல்முறையீட்டாளர்
எண்.3, திருவந்திபுரம் மெயின்ரோடு
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சிதம்பரம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 13.03.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 11.04.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 12.08.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 17.08.2023 |
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 17.11.2023 |
| 6 | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 10.10.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 17.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் அலுவலகம், சிதம்பரம் பதிவு மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "பார்வை- சிதம்பரம் மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4736/ஆ1/2022 நாள் 19/01/2023 - பார்வையில் கண்ட செயல்முறைகள் ஆணையில் "சொத்தின் உரிமை குறித்த நிலையில் உள்ளதாலும் தங்களின் சொத்தின் மீதான உரிமை குறித்து விசாரணை செய்து தீர்ப்பளிப்பது உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்குட்பட்டாகையால் தாங்கள் உரிமையியல் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காண இதன் யமூலம் தெரிவிக்கப்படுகிறது" எனக் கூறப்பட்டுள்ளது. எனவே எனது கணவர் பெயரில் பூர்வீக பட்டா மற்றும் 'அ' பதிவேடு எங்களிடம் இருப்பது போல் எதிர்மனுதாரரிடம் சிதம்பரம் மாவட்டப் பதிவாளர் அவர்கள் பெற்ற பூர்வீக பட்டா மற்றும் 'அ' பதிவேடு நகல் அல்லது மூல பத்திர நகல் தேவை" என்பன போன்று 8 (எட்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (05/06/2025) காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் தனது மகன் திரு.பாஸ்கர் என்பவருடன் கடலூர் மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன் திருமதி / செல்வி.ரா.தனலட்சுமி, மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), சிதம்பரம் பதிவு மாவட்டம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு ஏற்கனவே, 11/04/2023 தேதியிட்ட கடிதம் வாயிலாகவும், மீண்டும் 10/10/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாகவும் தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், 17/12/2024 தேதியிட்டு தனது ஆட்சேபணை மனுவினை ஆணையத்திற்கு அனுப்பி, அதில் இனங்கள் 1, 2, 3, 4, 8 ஆகியவற்றிற்கு, தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தவாறு தொகை செலுத்தப்பட்டு E-Challan -ஐ பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியும், தனக்கு ஆவணங்களின் நகல் அனுப்பப்படவில்லை எனத் தெரிவித்தார்.**

**3. இன்றைய விசாரணையின்போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், சமீபத்திய இனவாரியான 30/05/2025 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்களையும், மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் தொடர்புடைய ஆவணங்களில், தமது அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்ததின் நகல்களையும் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரரின் பிரதிநிதி, மேற்குறிப்பிட்ட தகவல்கள் / ஆவணங்களின் நகல்களைப் பெற்றுக் கொண்டதாக ஒப்புதல் தெரிவித்ததோடு, ஆனால், அதில் தாம் இனம் 1-க்கு எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பட்டாவின் நகல் மற்றும் "அ" பதிவேட்டின் நகல் ஆகியவற்றை கேட்டிருந்ததாகவும், அதனை வழங்க கட்டணம் செலுத்தி நகல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று 11/04/2023 தேதியிட்ட கடிதத்தில் கூறப்பட்டிருந்ததாகவும், ஆனால் சமீபத்திய 30/05/2025 தேதியிட்டு வழங்கிய தகவலில் எதிர்மனுதாரர் யாரும் ஆஜராகவில்லை, அவர்கள் எவ்வித ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வாறான சூழலில், ஏன் 11/04/2023 தேதியிட்டு தம்மை கட்டணம் செலுத்தி நகல் பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டிருந்தது என மனுதாரரின் பிரதிநிதி வினவினார். மனுதாரரின் பிரதிநிதி எழுப்பிய வினாவினை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது.**

**4. எனவே, அப்போதைய (11/04/2023 தேதிய) மாவட்டப் பதிவாளர், திருமதி/ செல்வி.மகாலட்சுமி, (தற்போது) மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), விருத்தாசலம் பதிவு மாவட்டம் அவர்கள், ஆவணங்களை முறையாக சரிபார்க்காமல் மேற்குறிப்பிட்ட தவறான தகவலை மனுதாரருக்கு வழங்கியதற்காக பிரிவு 20(1) மற்றும் 20(2) பிரிவின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலம் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், அதனைப் பெற்று ஆணையத்திற்கு 15 நாட்களுக்குள் அனுப்ப பணிக்கப்படுகிறார். இன்றைய விசாரணையின் போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், சிதம்பரம் பதிவு மாவட்டம் அவர்கள் அனுப்பிய சமீபத்திய 30/05/2025 தேதியிட்ட தகவலை ஆணையம் பரிசீலனை செய்து, ஆவணங்களின்படியான உரிய தகவலை அனுப்பியிருப்பதாக பதிவு செய்து, ஆணையம் ஏற்கிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 20144/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சிதம்பரம்.

2.திருமதி /செல்வி. மகாலட்சுமி
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது) மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
விருத்தாசலம் பதிவு மாவட்டம்
விருத்தாசலம்.

**மேல்முறையீட்டாளர்**

திருமதி.V.குமுதம் க/பெ.M.வேணுகோபால்
எண்.3, திருவந்திபுரம் மெயின்ரோடு
கூத்தப்பாக்கம், கடலூர் - 607 002.

நகல்
1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-600 028.

2.பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/PC